வணிக வித்தியம்
The Journal of Business Economics and Management Studies - JBEMS
Faculty of Commerce & Management
Eastern University, Sri Lanka.

# Identifying the Factors Influencing the Decline in the Selection of Economics as a Subject in the A/L Arts Stream

## உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தெரிவு குறைவடைந்து செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளம் காணல்

*முஹம்மது பாஹிம் பைஹா*[1]
*பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*
faihafahim2000@mail.com

*ஜெயப்பிரதீபா அன்ரன் அருள்ராஜ்*[2]
*பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*
jeyapiratheebaa@esn.ac.lk

**Abstract**

The declining selection of Economics as a subject among Advanced Level Arts stream students has become an important educational concern in recent years. This study aims to identify the factors influencing to the declining the selection of Economics among Arts stream students in schools within the Trincomalee Education Zone. A quantitative research design was adopted for the study. Primary data were collected from a sample of 120 Arts stream students using a structured questionnaire. The selection of Economics was treated as the dependent variable, while individual, family, school-related, and social factors, as well as curriculum awareness, were treated as independent variables. Data were analysed using descriptive statistics, Likert-scale analysis, Logistic regression, correlation analysis, reliability analysis, and the Independent Samples t-test. MS Excel 2019 and SPSS 2022 were used for data processing and analysis. The findings reveal that social factors strongly influence students' selection of Economics. Individual, family, school-related, and curriculum factors demonstrate a moderate level of influence. Furthermore, individual, family, and social factors were found to have a statistically significant impact on the selection of Economics at the 5% level. The study concludes that the declining interest in Economics can be addressed through integrated educational policies and targeted interventions that focus on family support, social perceptions, school environments, and curriculum awareness.

**Keywords:** Economics Subject, Arts Stream, Social Factors, Individual Factors, Family Factors, School Factors

*Corresponding* jeyapiratheebaa@esn.ac.lk

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.*

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையில் உயர்தர மாணவர்களிடையே பொருளியல் பாடத்தெரிவு குறைவடைந்து செல்லும் போக்கு அண்மைக்காலங்களில் முக்கிய கல்விசார் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்வாய்வின் முக்கிய நோக்கம் திருகோணமலை கோட்டக் கல்விப் பாடசாலைகளில் கலைப்பிரிவு உயர்தர மாணவர்களின் பொருளியல் பாடத் தெரிவு குறைவடைந்து செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறிதல் ஆகும். திருகோணமலை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 120 மாணவர்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் பொருளியலை ஒரு பாடமாகத் தெரிவு செய்தல் சார்ந்த மாறியாகவும் தனிப்பட்ட காரணிகள், குடும்ப காரணிகள், பாடசாலைக் காரணிகள், சமூகக் காரணிகள், மற்றும் பாடம் பற்றிய விழிப்புணர்வு ஆகியன சாரா மாறிகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறிந்து பகுப்பாய்வு செய்வதற்கு விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு, லிக்கட் ஸ்கேல் அணுகுமுறை, லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வு முறை, இணைவுக் குணகப் பகுப்பாய்வு, நம்பகத்தன்மை பகுப்பாய்வு மற்றும் சுயாதீன மாதிரி வ சோதனை முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக MS Excel 2019, SPSS 2022 ஆகிய மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவாக உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் சமூக காரணிகள் அதிக அளவினையும், ஏனைய தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, பாடம்சார் விழிப்புணர்வு காரணிகள் மத்திமமான அளவினையும் கொண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களுடைய பொருளியல் பாடத்தெரிவில் தனிப்பட்ட காரணிகள், குடும்ப காரணிகள் மற்றும் சமூக காரணிகள் 5 சதவீத பொருண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாக பொருளுள்ள வகையில் எதிர்கணிய தாக்கத்தினை செலுத்துகின்றன எனவும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவுகளினூடாக பொருளியல் பாடத் தெரிவின் குறைவுக்கு காரணமான குடும்ப, சமூக, பாடசாலை மற்றும் பாடத்திட்ட சவால்களை நிவர்த்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த கல்விக் கொள்கை அணுகுமுறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

**முதன்மைச் சொற்கள்:** பொருளியல் பாடம், உயர்தர கலைப்பிரிவு, சமூகக் காரணிகள், தனிப்பட்ட காரணிகள், குடும்ப காரணிகள், பாடசாலைக் காரணிகள்

## 1. அறிமுகம்

கல்வி என்பது ஒரு மனிதனின் அறிவை, ஆளுமையை மற்றும் திறமைகளை வளர்க்கும் ஒரு செயல்முறை ஆகும். இது ஒருவரை தனிநபராகவும், சமூக உறவுகளுக்கிடையே ஒரு பொறுப்புடைய நபராகவும் உருவாக்குகிறது. கல்வி என்பது மனிதனின் அத்தியாவசியத்தேவை என்பதுடன் அது மனிதனின் அடிப்படை உரிமையாகவும் காணப்படுகின்றது என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்தின் 26ஆம் உறுப்புரை குறிப்பிடுகிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டில், தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சி மற்றும் உலகமயமாக்கல் காரணமாக, மாணவர்கள் மனப்பாடம் சார்ந்த அறிவைப் பெறுவதிலிருந்து, பகுப்பாய்வுத் திறன், சிக்கலைத் தீர்க்கும் ஆற்றல் மற்றும் விமர்சன சிந்தனை போன்ற திறன்களை வளர்த்துக்கொள்வது அவசியமாகியுள்ளது. இத்தகைய திறன்களை வளர்ப்பதில், பொருளியல் கல்வி ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளியல் பாடமானது, மாணவர்கள் ஒரு நாட்டின் பொருளாதாரம், சந்தை இயக்கவியல், பணவீக்கம், வேலையின்மை மற்றும் உலக வர்த்தகம் போன்ற சிக்கலான விடயங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்த அறிவு, அவர்களைச் சமூகப் பொறுப்புள்ள குடிமக்களாக மாற்றுவதுடன், தமது தனிப்பட்ட நிதி முடிவுகளைப் பற்றிய விழிப்புணர்வையும் அதிகரிக்கிறது.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

பொருளாதாரக் கல்வி மாணவர்களுக்கு தேசிய மற்றும் உலக அளவில் பொருளாதாரக் கொள்கைகளை பகுப்பாய்வு செய்வதற்கும், பொருளாதாரப் பிரச்சனைகளை கண்டறிந்து தீர்வுகளை உருவாக்குவதற்கு அவசியமான பகுப்பாய்வு சிந்தனை திறன்களை வளர்ப்பதற்கும் ஒரு அடித்தளத்தை வழங்குகிறது (Bowls and Carlin, 2020).

உலகெங்கிலும் உள்ள வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள், தமது கல்வித் திட்டங்களில் பொருளியல் பாடத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. உதாரணமாக, சில மேற்கு நாடுகளில், பொருளியல் பாடமானது பாடசாலை மட்டத்திலேயே ஒரு விருப்பப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், எதிர்கால சவால்களுக்கு மாணவர்களைத் தயார்படுத்த முடியும் என கல்வியாளர்கள் நம்புகின்றனர். இருப்பினும், பல நாடுகளில், மாணவர்களிடையே கணக்கியல் மற்றும் பொருளியல் போன்ற கடினமான பாடங்களில் ஆர்வம் குறைந்து வருவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இது, எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என கல்வியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

உயர்தரக் கல்வி என்பது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை மற்றும் தொழில் வாய்ப்புகளைத் தீர்மானிக்கும் ஒரு முக்கியமான கட்டமாகும். மாணவர்கள் தெரிவு செய்யும் பாடங்கள், அவர்களது எதிர்கால கல்வி பாதை மற்றும் தொழில் வாய்ப்புகளை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். இலங்கையின் கல்வி முறை, உயர்தரப் பரீட்சை மூலம் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய அனுமதிக்கிறது. உயர்தரப் பிரிவு மாணவர்கள் கலை, விஞ்ஞானம், வர்த்தகம், தொழில்நுட்பம், மற்றும் கணிதம் போன்ற துறைகளில் ஒன்றைத் தெரிவுசெய்யலாம். இதில், கலைப்பிரிவு சமூக அறிவியல், மானுடவியல், மற்றும் அரசியல் அறிவியல் போன்ற துறைகளை உள்ளடக்கியது. இவற்றுள், கலைப்பிரிவு நீண்டகாலமாகவே அதிக மாணவர்களை ஈர்த்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம், கலைப்பிரிவு மாணவர்கள் பரந்த அளவிலான பாடங்களைத் தெரிவு செய்ய முடியும் என்பதும், அது ஒப்பீட்டளவில் எளிதானது என்ற பொதுவான நம்பிக்கையும் ஆகும்.

எனினும், கடந்த சில வருடங்களில், இலங்கையில் கலைப்பிரிவு மாணவர்களின் பரீட்சை முடிவுகள் குறிப்பாகப் பொருளியல் போன்ற பாடங்களில் வீழ்ச்சியடைந்து வருகின்றன. இந்தப் பாடத்தில் போதிய தேர்ச்சி பெற முடியாமல் திணறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், இலங்கைத் தேர்வுகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பரீட்சை முடிவுகளை ஆராயும்போது, கலைப்பிரிவில் பொருளியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களின் மொத்த வீதம் குறைந்துள்ளதைக் காண முடிகிறது. இந்தக் குறைவடைந்து செல்லும் போக்கு, இலங்கை முழுவதும் காணப்பட்டாலும், இது பிராந்திய ரீதியாக வேறுபடுகின்றது. கல்விச் சமூகம் விழிப்படைந்து திட்டமிட்ட அடிப்படையில் காரியங்களை செயற்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்நிலையில் இவ்வாய்வானது திருகோணமலை கோட்டக் கல்வி பாடசாலைகளில் உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத் தெரிவு குறைவடைந்து செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறிவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

## 2. இலக்கிய மீளாய்வு

Calkins and Welki (2006) என்பவர்கள் பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதில் கணிதத் திறன், கற்பித்தல் முறை, வருமானம், பாலினம், முன் கல்வி அனுபவம் போன்ற சுயாதீன மாறிகள் மற்றும் லொஜிட், புரொபிட் பிற்செலவுப் பகுப்பாய்வின் அடிப்படையில், பாடத்தின் மீதான விருப்பம், முக்கிய வகுப்புக்களில் செயல்திறன், ஆசிரியர்களின் அணுகக்கூடிய தன்மை கற்பித்தல் முறை என்பவை பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்துவதாக கண்டறிந்துள்ளனர்.

Sanjana Mehta et al. (2011) என்பவர்கள், தங்களது ஆய்வில் பெரும்பாலான மாணவர்கள் பொருளியல் பாடத்தை விருப்பத்தின் அடிப்படையிலும், தேசிய மற்றும் சர்வதேச புரிதலைப்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

பெறமுடியும் என்ற நம்பிக்கையிலும் தேர்வு செய்கின்றார்கள் என்பதனை முதலாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி விபரண புள்ளிவிபரவியல் ரீதியாக கண்டறிந்துள்ளனர்.

Erico et al. *(2025)* என்பவர்கள் தங்களது ஆய்வில் Treffinger கற்றல் மாதிரியை பயன்படுத்தி வரைபடம் தொடர்பான பாடங்கள் கற்பித்தலில் மாணவர்களின் மதிப்பெண்கள் நேர்கணிய தாக்கத்தினை செலுத்தியுள்ளது எனக் கூறியுள்ளனர். Pasupathy et al. *(2024)* என்பவர்கள் தனது ஆய்வில் தனிப்பட்ட காரணிகள், பாடத்தின் தன்மை, ஏனையவர்களிடமிருந்து பெறப்படும் ஊக்கங்கள், தொழில் வாய்ப்பு மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்கள் போன்ற மாறிகளை பயன்படுத்தியுள்ளனர். க.பொ.த சாதாரண தர காலத்தில் மற்றும் சமூக விழிப்புணர்வு பற்றி வழிகாட்டல் இல்லாதது பெற்றோர் மற்றும் நண்பர்களிடமிருந்து கிடைக்ககப்பெறும் குறைந்தபட்ச ஊக்கம் ஆகியவை தொழில்நுட்ப பிரிவை தொடர தயக்கம் காட்டுகின்றார்கள் என்பதை விபரண புள்ளிவிபர பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

Perera and Pratheesh *(2018)* என்பவர்கள் தங்களது ஆய்வில் பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் வேலைதொடர்பான காரணி மற்றும் கல்வித்தரம் என்பவை முக்கியமானது என்பதை முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி விபரண புள்ளிவிபர பகுப்பாய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர். Silva *(2025)* என்பவர் தனது ஆய்வில் ஆண் மாணவர்கள் வணிகப் பிரிவை அதிகமாகத் தெரிவு செய்கிறார்கள் என்பதும், அதே சமயம் நிகழ்ச்சிகளில் ஈடுபடும் மாணவர்கள் கலைப்பிரிவை விரும்புகின்றனர் என்பதும், கணித மதிப்பெண் குறைவானவர்கள் கலைப் பிரிவை தெரிவு செய்யும் வாய்ப்பு அதிகம் எனவும், வேலை வாய்ப்புகள் குறித்த அறிவு குறைவு மற்றும் தொழில் வழிகாட்டுதலின் பற்றாக்குறை பிரச்சினையாக உள்ளது என்றும், எனவே, மாணவர்கள் தங்கள் திறமை மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் முடிவு செய்ய தொழில் வழிகாட்டல் திட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளன.

Duong and Pham *(2025)* என்பவர்களின் ஆய்வு முடிவுகள் படி, கல்வி செயல்திறன், கல்விக் கட்டணம், பிறரின் கருத்து, கல்வி துறையின் பார்வை மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய ஐந்து காரணிகள் மாணவர்களின் பல்கலைக்கழகத் தெரிவில் நேர்தாக்கம் செலுத்துகின்றன என்பதும், உணரப்பட்ட அபாயம் எதிர்தாக்கம் செலுத்துகிறது என்பதும், கூடுதலாக, பாலினம், வயது, இனம் போன்ற தனிநபர் பண்புகளும் மாணவர்களின் தெரிவு முடிவை பாதிக்கின்றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளன. மாணவர்களை ஈர்க்கச் சிறந்த தகவல் தொடர்பு மற்றும் ஆலோசனைத் திட்டங்கள் அவசியம் என்பன கண்டறியப்பட்டுள்ளன.

Hirhyle et al. *(2023)* என்பவர்கள் தங்களது ஆய்வில் மாணவர்கள் தொழில் தெரிவுக்காக பாடங்களை தெரிவு செய்யும் போது, பெற்றோரின் தாக்கம் எவ்வளவு உள்ளது என்பதை ஆய்வு செய்தனர். முடிவுகளின்படி, பெற்றோரின் தாக்கம் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. Sirithunga *(2023)* என்பவர் தனது ஆய்வில் இலங்கையில் உயர்தர பாடத் தெரிவில் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் குறைவாகவுள்ள பிரச்சினையை அடையாளப்படுத்துகின்றார். சாதாரண தர பரீட்சைக்கு பிறகு, மாணவர்கள் சரியான வழிகாட்டுதலின்றி பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள் போன்றோரின் ஆலோசனைகளை நம்புகின்றனர். இதனால், தவறான பாடத் தெரிவு, பின்னர் மாற்றம் மற்றும் நேரம், பண விரயம் ஏற்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

Yanhong et al. *(2025)* என்பவர்கள் தங்களது ஆய்வில் சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள நான்கு பொது பாடசாலைகளில் இருந்து 665 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் ஆசிரியர் ஆதரவு எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை ஆராய்ந்துள்ளனர். கற்றல் ஈடுபாட்டில் சமீப காலங்களில் அதிக ஆர்வம் காணப்பட்ட போதிலும் ஆசிரியர் ஆதரவு, கல்வி, தன்னம்பிக்கை, உளவியல் பொறுப்பு மற்றும் நேரான கல்வி வளர்ச்சி ஆகியவை முக்கிய காரணிகளாகக் கருதப்படுகின்றன என்பதையும், ஆசிரியர் ஆதரவு கற்றல் ஈடுபாட்டுடன் நேர்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

தொடர்பும், கல்வி தன்னம்பிக்கை மற்றும் உளவியல் பொறுப்பு வழியாக, ஆசிரியர் ஆதரவு மறைமுகமாகவும் தாக்கம் செலுத்துகிறது என்பதும் கண்டறியப்பட்டுள்ளன.

Hawaa and Muhammed *(2025)* என்பவர்கள் தங்களது ஆய்வில் கற்பித்தல் முறைகள் தெரிவு மற்றும் அதன் கல்விச் செயல்முறையில் ஏற்படும் தாக்கத்தில் ஆசிரியரின் பங்கு குறித்து ஆராய்கிறது. *21*ஆம் நூற்றாண்டு கற்றல் சூழல் தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தல் முறைகளைச் சீரமைப்பதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் ஆய்வு செய்வதுடன் இக்கண்டுபிடிப்புகள், ஆசிரியர்கள் மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பாளர்களுக்கு மாணவர் மையப்படுத்திய கல்வி அனுபவத்தை உருவாக்க வழிகாட்டுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

Oyinloye and Soetan *(2025)* என்பவர்கள் தங்களது ஆய்வில் உயர்நிலைப் பாடசாலை மாணவர்களின் தொழில் தெரிவில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்ந்துள்ளனர். பெற்றோர் மற்றும் நண்பர்கள் தொழில் தெரிவு முடிவெடுப்பில் முக்கிய பாதிப்பை ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கட்டாயமாக தொழிலைத் திணிக்கக் கூடாது என்பதும் மேலும், மாணவர்கள் நண்பர்களின் செல்வாக்கை தவிர்த்து, தங்கள் திறன் மற்றும் ஆர்வத்திற்கேற்ற தொழிலைத் தெரிவு செய்ய ஆலோசகர்கள் வழிகாட்ட வேண்டும். பாடசாலைகளில் தொழில் ஆலோசகர் நியமனம் மற்றும் தொழில் தினம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளன. Wijesinghe and Ranasuriya *(2021)* என்பவர்கள் தங்களது ஆய்வில் உயர்தரம் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புகளையும், உயர்ந்த ஊதியம் தரும் வேலைகளையும் பெறும் வாய்ப்பு இருந்தாலும், தவறான பாடப்பிரிவு தெரிவின் காரணமாக பலர் தோல்வியடைகிறார்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

Sivanantham et al. *(2024)* என்பவர்கள் தங்களது ஆய்வில் *2013*ஆம் ஆண்டில் உயர்தர தெரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பபிரிவு தொடர்பான மாணவர்களின் தெரிவு மனப்பாங்கை ஆராய்கிறது. வேலை வாய்ப்பு மற்றும் உயர் கல்வி வாய்ப்புகள் மாணவர்களின் தெரிவில் நேர்தாக்கம் செலுத்துகின்றன எனவும், ஆனால் சாதாரண தர நிலையில் வழிகாட்டல் குறைவு, சமூக விழிப்புணர்வு பற்றாக்குறை, பெற்றோர் மற்றும் சக மாணவர்களின் குறைந்த ஆதரவு ஆகியவை தொழில்நுட்பப் பிரிவில் மாணவர்கள் சேர்வதனைத் தடுக்கும் காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளன. எனவே, தொழில் வழிகாட்டல் பிரிவின் மூலம் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் போதுமான ஆலோசனை வழங்கப்பட வேண்டும் என்பதும், குறிப்பாக உயர் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி சான்றிதழின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட வேண்டும் என்பதும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குடியியல் கல்வி மற்றும் பொருளாதாரம் தொடர்பான கூடுதல் கட்டாய நேரம் மாணவர்கள் அதனுடன் தொடர்புடைய பாடங்களைத் தேர்வு செய்வதில் சிறிய ஆனால் நேர்தாக்கம் காணப்படுகின்றன என்பதையும், ஆனால் கணினி அறிவியல் தொடர்பான முடிவுகள் தெளிவற்றதாக உள்ளன என்பதையும், நீண்டகால விளைவுகளைப் புரிந்துகொள்ள மேலதிக ஆய்வு தேவையாகும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது (Norbert et al., *2024)*.

Ann *(2013)* என்பவர் தனது ஆய்வில் கல்லூரி முக்கியப்பாடத் தெரிவில் நிலைத்து வரும் பாலின வேறுபாடுகளை ஆராய்ந்துள்ளார். முன்னிலை பெற்ற மாணவர்கள் தங்கள் பாடத் தெரிவில் பாரம்பரிய பாலின அடையாளங்களையும் குடும்பத்தின் எதிர்கால எதிர்பார்ப்புகளையும் கருத்தில் கொள்கின்றனர். இதனால், பாடத் தெரிவு தொழில் நோக்கத்தைத் தாண்டி சமூக நிலைமை மற்றும் பாலின அடிப்படையிலான சிந்தனைகளை பிரதிபலிக்கிறது. ஆழமான நேர்காணல்களின் அடிப்படையில், இந்த ஆய்வு பாலின அடிப்படையிலான அர்த்தங்களில் வேறுபாடுகள் உள்ளன என்பதும், பாடத் தெரிவு செயல்முறைகள் கல்லூரியின் நிறுவனச் சூழல் மற்றும் மாணவர்களின் சமூகப் பின்னணி ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

Majid and Banu *(2024)* என்பவர்கள் தங்களது ஆய்வில் *120* கலைத்துறை மாணவர்களிடமிருந்து நேரடி கேள்வியறிக்கைகள் மற்றும் ஆழமான நேர்காணல்கள் மூலமும், புத்தகங்கள், ஆய்வு கட்டுரைகள் மற்றும் அதிகாரப்பூர்வ அறிக்கைகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டு இலங்கையில் கலைப்பிரிவு பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு சவால்கள் மற்றும் வேலை இல்லாத நிலையை ஆராய்கிறது. தொழில்முறை பாடங்கள் மற்றும் பயிற்சிகளை முடித்த கலை மாணவர்கள் முதற்கட்ட வேலை வாய்ப்புகளை பெற அதிக வாய்ப்பு கொண்டுள்ளனர். ஆய்வானது, பட்டதாரிகளின் வேலைவாய்ப்பை மேம்படுத்த, அரசு மற்றும் கல்வி நிறுவனங்களின் முக்கிய மாற்றங்கள் தேவை என்பதைக் கண்டறிந்துள்ளது.

பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதில் கணிதத்திறன், கற்பித்தல் முறை, வருமானம், பாலினம், முன்கல்வி அனுபவம் போன்றவற்றை சுயாதீன மாறிகளாகக் கொண்டு பாடத்தின் மீதான விருப்பம், முக்கிய வகுப்புக்களில் செயல்திறன், ஆசிரியர்களின் அணுகக்கூடிய தன்மை கற்பித்தல் முறை என்பவை செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது, லொஜிட் மற்றும் புரொபிட் பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது (Calkins and Welki*, 2006).*

NguyenThi and PhuongTha *(2023)* என்பவர்கள் எனும் தங்களது ஆய்வில் பொருளாதாரக் கல்வி கருத்தியல் அறிவை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வளர்ந்து வரும் உலகப் பொருளாதாரத்தில் தீவிரமாகப் பங்கேற்கத் தேவையான அணுகுமுறைகளையும் திறன்களையும் உருவாக்குகிறது என்பதனை முதலாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி விபரண புள்ளிவிபரவியல் ரீதியாக கண்டறிந்துள்ளனர். Erico et al. *(2025)* என்பவர்கள் தங்களது ஆய்வில் Treffinger கற்றல் மாதிரியை பயன்படுத்தி வரைபடம் தொடர்பான பாடங்கள் கற்பித்ததில் மாணவர்களின் மதிப்பெண்கள் நேர்கணிய தாக்கத்தினை செலுத்துகின்றது என்பதனை கண்டறிந்துள்ளனர்.

Katerina and Kristyna *(2020)* என்பவர்கள் தங்களது ஆய்வில் பாடங்களின் பிரபல்யம் மற்றும் அதன் பாடத்திட்ட கவர்ச்சி மற்றும் நடைமுறை முக்கியத்துவம் ஆகியவற்றுக்கு வலுவான தொடர்பு காணப்படுவதையும், ஆனால், பாடங்களின் கடினம் அதன் பிரபல்யத்தை குறைக்கவில்லை என்பதையும், இது எதிர்கால ஆராய்ச்சிக்கு புதிய கேள்விகளை எழுப்புவதும் கண்டறியப்பட்டுள்ளது.

### *3. ஆய்வு முறையியல்*

ஆய்வு நோக்கத்தை அடையும் வகையில் திருகோணமலை கல்வி வலயத்தில் திருகோணமலை தலைநகர கோட்டத்திற்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கலைப்பிரிவில் உயர்தரம் கற்றுக்கொண்டிருக்கும் பொருளியல் பாடத்தை ஒரு பாடமாக தெரிவு செய்த மற்றும் தெரிவு செய்யாதவர்களில் இருந்து எளிய எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட *120* மாணவர்களிடமிருந்து வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. அதேபோல பாடசாலை அதிபர்கள், பொருளியல் பாடத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் பொருளியல் பாடத்திற்கு பொறுப்பான வலயக் கல்வி அதிகாரிகளிடமிருந்து கலந்துரையாடல் மூலம் தரவுகள் பெறப்பட்டன. இத்தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இப்பகுப்பாய்வானது MS Excel *2019,* SPSS *2022* ஆகிய மென்பொருட்களை பயன்படுத்தி உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் மாறிகளான தனிப்பட்ட காரணிகள், குடும்ப காரணிகள், பாடசாலை காரணிகள், பாடம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் சமூகக் காரணிகள் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு, பொருளியலளவைப் பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வில் குடியியல்சார் காரணிகள் மற்றும் பொருளியல் பாடத்தெரிவில் மாணவர்கள் கொண்டுள்ள சவால்கள் அட்டவணைகள், வரைபடங்கள், சாரசரி, நியம விலகல் மற்றும் *5* புள்ளி அளவுத்திட்ட லிக்கட் ஸ்கேல் அளவீடுகளை பயன்படுத்தி விகிதாசார அடிப்படையிலும், பொருளியலளவைப் பகுப்பாய்வில் பொருளியல் பாடத்தெரிவில் மாணவர்கள் கொண்டுள்ள

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.*

சவால்கள் இணைவுக் குணகப் பகுப்பாய்வு, லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வு, நம்பகத்தன்மை பகுப்பாய்வு மற்றும் சுயாதீன மாதிரி t சோதனை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### *3.1 லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வு முறை*

உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தை தெரிவு செய்தல் குறைவடைந்து செல்வதற்கான காரணிகளை கண்டறிவதற்கு லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வு மாதிரியுரு பயன்படுத்தப்படுகின்றது. சார்ந்த மாதிரியானது பண்பு ரீதியான தரவுகளை கொண்டிருக்குமானால் அதனை மதிப்பீடு செய்வதற்காக லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வு மாதிரியுரு பயன்படுத்தப்படுகின்றது. எமது ஆய்வுக்குப் பயன்படுத்திய மாறிகளுக்கு ஏற்றவாறு லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வு மாதிரியுரு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ES = F (PER , FAM , SCH , SUB , SOC)

$$y_i = \beta_0 + \beta_1\text{PER} + \beta_2\ \text{FAM} + \beta_3\text{SCH} + \beta_4\text{SUB} + \beta_5\ \text{SOC} + \varepsilon_i$$

$y_i$ - பொருளியல் பாடத் தெரிவு

$\beta_0$ - வெட்டுத்துண்டு

PER - தனிப்பட்ட காரணிகள்

FAM - குடும்ப காரணிகள்

SCH - பாடசாலை காரணிகள்

SUB - பாடம்சார் விழிப்புணர்வு

SOC - சமூக காரணிகள்

$\beta_1 , \beta_2, \beta_3, \beta_4, \beta_5$ - சரிவுப் பெறுமதிகள்

$\varepsilon_i$ - வழுப் பெறுமதி

இங்கு சார்ந்த மாறியானது போலி மாறியாகும். இது உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் பொருளியல் பாடத்தை தெரிவு செய்திருப்பதற்கான நிகழ்தகவினைக் குறிக்கின்றது. உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத் தெரிவினை விளக்குவதற்காக தனிப்பட்ட காரணிகள், குடும்பக் காரணிகள், பாடசாலை காரணிகள், பாடம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் சமூகக் காரணிகள் ஆகிய சாரா மாறிகள் லொஜிட் மாதிரியுருவைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளன.

### *3.2 இணைவுக் குணகச் சோதனை*

இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட சுயாதீன மாறிகளுக்கிடையிலான (Independent Variables) தொடர்பின் தன்மை மற்றும் வலிமையை மதிப்பீடு செய்வதற்காக இணைவுக் குணக சோதனை (Correlation Coefficient Test) மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, தனிப்பட்ட காரணிகள், குடும்ப காரணிகள், சமூகக் காரணிகள், பாடசாலை காரணிகள் மற்றும் பாடம் சார்ந்த விழிப்புணர்வு ஆகிய மாறிகள் ஒன்றுக்கொன்று எந்தளவிற்கு தொடர்புடையவை என்பதை கண்டறிவதே இச் சோதனையின் முக்கிய நோக்கமாகும்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

*3.3 சுயாதீன மாதிரி* **t** *சோதனை (***Independent sample t test***)*

*சுயாதீன மாதிரி* t *சோதனை என்பது புள்ளிவிபர ரீதியாக இரண்டு வேறுபட்ட குழுக்களின் சாரசரி மதிப்புக்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றதா என்பதை பரிசோதிக்கப் பயன்படுத்தும் முறையாகும். இதன்படி, இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட சார்ந்த மாறியான பொருளியல் பாடத்தெரிவில் சாரா மாறிகளான தனிப்பட்ட காரணிகள், பாடசாலைக் காரணிகள், குடும்பக் காரணிகள், சமூகக் காரணிகள் மற்றும் பாடம்சார் விழிப்புணர்வு ஆகியவை ஆண் மாணவர்களுக்கும், பெண் மாணவர்களுக்கிடையில் மற்றும் குடும்பத்தில் முதல் மாணவனுக்கும், ஏனைய மாணவர்களுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றதா என்பதை சுயாதீன மாதிரி* t *சோதனை மூலம் பரிசோதனை செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.*

***3.4 விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறை***

*இவ்வாய்விற்காக தெரிவு செய்யப்பட்ட குடியியல்சார் காரணிகளான பால்நிலை, தந்தையின் கல்வி நிலை, தாயின் கல்வி நிலை, குடும்பத்தின் மாத வருமானம், குடும்பத்தில் மாணவனின் நிலை, பொருளியல் பாடத் தெரிவு மற்றும் பாடத்தெரிவில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் போன்ற தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.*

*பொருளியல் பாடத்தெரிவில் மாணவர்கள் கொண்டுள்ள சவால்களான தனிப்பட்ட காரணிகள், குடும்பக் காரணிகள், பாடசாலைக் காரணிகள், பாடம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் சமூகக் காரணிகளின் இடை மற்றும் நியம விலகல், 5 புள்ளி அளவுத்திட்ட லிக்கட் ஸ்கேல் அளவீடுகளை பயன்படுத்தி விகிதாசார அடிப்படையில் ஆய்வு நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.*

*3.5 நம்பகத்தன்மைப் பகுப்பாய்வு (***Reliability Analysis***)*

*ஐந்து காரணிகளின் கீழ் உள்ள லிக்கேட் அளவுத்திட்ட 34 கூற்றுக்களுக்கும்* Cronbach *அல்பா சோதனை மூலம் அவற்றின் உண்மைத்தன்மை பரிசோதிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அனைத்துக் காரணிகளுக்குமான அல்பா பெறுமானம் 0.7 ஐ விட உயர்வாக அமையவேண்டும். இவ்வாறு அமைந்தால் இக்கூற்றுக்கள் நம்பகத்தன்மையுடையதாக இருக்கும்.*

***4. ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடலும்***

***4.1 விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு***

*விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வின் அடிப்படையில் இவ் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களில் 73 சதவீதமானோர் பெண்களாகவும், 27 சதவீதமானோர் ஆண்களாகவும் காணப்படுகின்றார்கள். தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் 50 சதவீதமான மாணவர்கள் உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தை தெரிவு செய்துள்ளதுடன், மிகுதி 50 சதவீதமான மாணவர்கள் பொருளியல் பாடத்தை தெரிவு செய்யவில்லை என்பதையும், அதிமான மாணவர்களுடைய தந்தையர்கள் மற்றும் தாய்மார்கள் சாதாரணதரம் வரையிலே கல்வி கற்றவர்களாக காணப்படுவதையும், 48 சதவீதமான மாணவர்களுடைய குடும்பத்தின் மாத வருமானம் ரூபா 60,000 ஐ விட குறைவாகவும், 57 சதவீதமான மாணவர்கள் குடும்பத்தில் முதல் மாணவர்களாக காணப்படுகின்றமையும், 56 சதவீதமான மாணவர்களுடைய பாடத்தெரிவில் பாடசாலைச் சூழல் பங்கு வகிக்கவில்லை என்பதனையும், மாணவர்களுடைய பாடத்தெரிவில் 89 சதவீதம் குடும்பத்தின் அழுத்தம் காணப்படுகின்றமையும், கல்வி கற்க வேண்டும் என்ற ஆசையிலே 66 சதவீதமான மாணவர்கள் பாடங்களைத் தெரிவு செய்தமையும் முடிவுகளாக பெறப்பட்டுள்ளன.*

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 

### *4.2* Likert Scale அணுகுமுறை

ஆய்வுக்குட்படுத்திய பகுதியில் தனிப்பட்ட காரணிகள், குடும்பக் காரணிகள், பாடசாலை காரணிகள், பாடம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் சமூகக் காரணிகள் உயர்தரகலைப்பிரிவு மாணவர்களுடைய பொருளியல் பாடத்தெரிவு குறைவடைந்து செல்வதற்கு எத்தகைய செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பது தொடர்பாக எளிய எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 120 மாணவர்களுக்கு கூற்றுக்கள் வழங்கப்பட்டு மாணவர்களுடைய அபிப்பிராயங்கள் 5 புள்ளி அளவுத்திட்ட Likert scale அணுகுமுறைக்கான தரவுகளாக பெறப்பட்டுள்ளன.

இவ் 5 புள்ளி அளவுத்திட்டமானது தனிப்பட்ட காரணிகளில் 8 கூற்றுக்களையும், குடும்ப காரணிகளில் 4 கூற்றுக்களையும், பாடசாலை காரணிகளில் 8 கூற்றுக்களையும், சமூகக் காரணிகளில் 4 கூற்றுக்களையும், பாடம் பற்றிய விழிப்புணர்வில் 10 கூற்றுக்களையும் உள்ளடக்கியுள்ளது. இத்தரவுகளின் சராசரிப் பெறுமதி, நியம விலகல் மற்றும் தரவுகளின் நம்பகத்தன்மை தொடர்பான பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக SPSS 2022 மென்பொருளானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை *1:* Likert Scale அணுகுமுறைக்கான பெறுபேறுகள்**

| மாறிகள் | கூற்றுக்களின் எண்ணிக்கை | இடை | நியம விலகல் |
|---|---|---|---|
| தனிப்பட்ட காரணிகள் | 8 | 2.7948 | 0.49120 |
| பாடசாலைக் காரணிகள் | 8 | 2.5094 | 0.67152 |
| குடும்பக் காரணிகள் | 4 | 2.5083 | 0.84698 |
| பாடம்சார் விழிப்புணர்வு | 10 | 3.1083 | 0.52430 |
| சமூகக் காரணிகள் | 4 | 3.5792 | 0.91898 |

மூலம்: ஆய்வுத் தரவுகளிலிருந்து ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது, 2025

தனிப்பட்ட காரணிகளின் சராசரிப் பெறுமதியின் அடிப்படையில், உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் தனிப்பட்ட காரணிகள் மத்திமமான அளவினை கொண்டதாகக் காணப்படுகின்றது. பாடசாலைக் காரணிகளின் சராசரிப் பெறுமதியின் அடிப்படையில், உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் பாடசாலை காரணிகள் மத்திமமான அளவினை கொண்டதாகக் காணப்படுகின்றது. குடும்ப காரணிகளின் சராசரிப் பெறுமதியின் அடிப்படையில், உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் குடும்பக் காரணிகள் மத்திமமான அளவினை கொண்டதாக காணப்படுகின்றது. பாடம் சார் விழிப்புணர்வின் சராசரிப் பெறுமதியின் அடிப்படையில், உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் பாடம்சார் விழிப்புணர்வு மத்திமமான அளவினை கொண்டதாகக் காணப்படுகின்றது. சமூகக் காரணிகளின் சராசரிப் பெறுமதியின் அடிப்படையில், உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் சமூகக் காரணிகள் அதிக அளவினை கொண்டதாகக் காணப்படுகின்றது.

Likert Scale பகுப்பாய்வு முடிவுகளின் படி, உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் சமூகக் காரணிகள் அதிக அளவினையும், ஏனைய தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, பாடம்சார் விழிப்புணர்வு காரணிகள் மத்திமமான அளவினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

**அட்டவணை 2: சாரா மாறிகளுக்கான இணைவுக்குணகம்**

| | சாரா மாறிகள் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| 1 | தனிப்பட்ட காரணிகள் | 1 | | | | |
| 2 | பாடசாலைக் காரணிகள் | .300** (.001) | 1 | | | |
| 3 | குடும்பக் காரணிகள் | .246** (.007) | .655** (.000) | 1 | | |
| 4 | பாடம்சார் விழிப்புணர்வு | .072 (.435) | .048 (.606) | -.058 (.530) | 1 | |
| 5 | சமூகக் காரணிகள் | -.225* (.013) | -.115 (.210) | -.132 (.151) | .579** (.000) | 1 |

*() நிகழ்தகவுப் பெறுமதியை குறிக்கிறது. *5% பொருண்மை மட்டம் **1% பொருண்மை மட்டம்*

*மூலம்: ஆய்வுத் தரவுகளிலிருந்து ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது, 2025*

சரா மாறிகளுக்கிடையிலான இணைவுக் குணகப் பெறுபேற்றின் அடிப்படையில், பாடசாலை காரணிகளுக்கும் தனிப்பட்ட காரணிகளுக்கிடையிலும், குடும்ப காரணிகளுக்கும் தனிப்பட்ட, பாடசாலை காரணிகளுக்கிடையிலும், சமூகக் காரணிகளுக்கும் பாடம்சார் விழிப்புணர்விற்குமிடையிலும் நேர்தொடர்பும், சமூகக் காரணிகளிற்கும் தனிப்பட்ட காரணிகளுக்குமிடையில் எதிர்தொடர்பும், பாடம்சார் விழிப்புணர்விற்கும் தனிப்பட்ட, பாடசாலை, சமூக காரணிகளுக்கிடையிலும், சமூக காரணிகளிற்கும் பாடசாலை, குடும்ப காரணிகளுக்கிடையிலும் எவ்வித தொடர்பின்மையும் காணப்படுகின்றன. பெரும்பாலான மாறிகள் மிதமான அல்லது குறைந்த அளவிளான இணைவைக் காட்டுவதால், இம்மாறிகள் லொஜிட் பகுப்பாய்விற்கு பொருத்தமானவையாக கருதப்படுகின்றன.

### 4.3 லொஜிட் பிற்செலவு பகுப்பாய்வு

லொஜிட் பிற்செலவு மாதிரியுருவானது தனிப்பட்ட காரணிகள், குடும்பக் காரணிகள், பாடசாலைக் காரணிகள், சமூகக் காரணிகள் மற்றும் பாடம் பற்றிய விழிப்புணர்வு போன்ற விளக்கமளிக்கும் மாறிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ள லொஜிட் மாதிரியுருவானது 66.4 வீத ($R^2$ = 0.664) ஒட்டுமொத்த பொருத்தப்பாட்டுத் தன்மையை கொண்டுள்ளது. இதன்படி சார்ந்த மாறியான பொருளியல் பாடத் தெரிவில் 66.4 சதசதவீதமான பகுதி தனிப்பட்ட காரணிகள், குடும்பக் காரணிகள், பாடசாலை காரணிகள், சமூகக் காரணிகள் மற்றும் பாடம் பற்றிய விழிப்புணர்வு போன்ற சாரா மாறிகளாலும், இடைவெட்டினாலும் விளக்கப்பட 33.6 சதவீதமான பகுதி வழுவினாலும் விளக்கப்படுகின்றது என்பதை குறித்து நிற்கின்றது.

**அட்டவணை 3: லொஜிட் பிற்செலவு மாதிரியின் சுருக்கம்**

| | Log likelihood | Nagelkerke R Square | P_value |
|---|---|---|---|
| Overall statistics | 83.687 | .664 | .000 |

*மூலம்: ஆய்வுத் தரவுகளிலிருந்து ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது, 2025*

மேலும் 5 சதவீத பொருண்மை மட்டத்தில் லொஜிட் மாதிரியுரு ஒட்டுமொத்தமாக பொருளுள்ள வகையில் தாக்கம் செலுத்துவதாக உள்ளது. அதேபோல் லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவானது 83.687 என்ற மடக்கை இயல்தகவு (log likelihood)

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

பெறுமதியினைக் கொண்டும் விளங்குகிறது. இது இம்மாதிரி நன்றாக பொருந்துவதை (good fit) குறிக்கிறது.

***அட்டவணை 4: லொஜிட் பிற்செலவுப் பகுப்பாய்வின் பெறுபேறுகள்***

| சாரா மாறிகள் | Coef | Std.Err | Wald | P_Value | Significant | Exp(B) |
|---|---|---|---|---|---|---|
| தனிப்பட்ட காரணிகள் | -1.479 | .619 | 5.714 | .017 | (5%) | 0.228 |
| பாடசாலைக் காரணிகள் | -.082 | .532 | .024 | .878 | × | 0.921 |
| குடும்பக் காரணிகள் | -1.124 | .496 | 5.140 | .023 | (5%) | 0.325 |
| பாடம்சார் விழிப்புணர்வு | .590 | .755 | .610 | .435 | × | 1.804 |
| சமூகக் காரணிகள் | - 2.476 | .538 | 21.78 | .000 | (5%) | 0.084 |

*மூலம்: ஆய்வுத் தரவுகளிலிருந்து ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது, 2025*

உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தெரிவில் தனிப்பட்ட காரணிகள், குடும்பக் காரணிகள் மற்றும் சமூகக் காரணிகள் 5 வீத பொருளுண்மை மட்டத்தில் தாக்கம் செலுத்துகின்றன. பாடசாலை காரணிகள் மற்றும் பாடம்சார் விழிப்புணர்வு ஆகியவை உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தை தெரிவில் பொருளுள்ள வகையில் எவ்வித தாக்கம் செலுத்தவில்லை.

மதிப்பிடப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் தனிப்பட்ட காரணிகள் 1.0 ஐ விட குறைவான Exp(B) மதிப்பை கொண்டுள்ளன. இதன் Exp(B) பெறுமதி 0.228 ஆகக் காணப்படுகின்றது. தனிப்பட்ட காரணிகளின் செல்வாக்கு ஒரு அலகால் அதிகரிக்கும் போது உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தை தெரிவுசெய்வதற்கான நிகழ்தகவானது 72.2 சதவீதத்தால் (1- 0.228 = 0.722) குறைவடையும். தனிப்பட்ட விருப்பத்தேர்வு, தன்னம்பிக்கை மற்றும் முன்கல்வித் திறன் போன்ற தனிப்பட்ட காரணிகள் உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதற்கான வாய்ப்பினை கணிசமாகக் குறைக்கின்றது. நிகழ்தகவுப் பெறுமதி 0.017 ஆக இருப்பதால் 5% பொருண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாக பொருண்மை வாய்ந்ததாக காணப்படுவதுடன், பொருளியல் பாடத் தெரிவிற்கும் தனிப்பட்ட காரணிகளுக்குமிடையே எதிர்கணியத் தொடர்பு காணப்படுகின்றன. உயர்தர கலைப்பிரிவில் மாணவன் பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதில் தனிப்பட்ட காரணிகள் முக்கியமான தடைக் காரணியாக காணப்படுகின்றன.

குடும்ப காரணிகள் 1.0 ஐ விட குறைவான Exp(B) மதிப்பை கொண்டுள்ளன. இதன் Exp(B) பெறுமதி 0.325 ஆகக் காணப்படுகின்றது. ஆகவே, குடும்ப காரணிகளின் செல்வாக்கு ஒரு அலகால் அதிகரிக்கும் போது உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தை தெரிவுசெய்வதற்கான நிகழ்தகவானது 67.5 வீதத்தால் (1 - 0.325 = 0.675) குறைவடையும். பெற்றோரின் கல்வி நிலை, குடும்ப ஆதரவு மற்றும் குடும்ப பொருளாதார நிலை போன்ற குடும்ப காரணிகள் உயர்தரகலைப்பிரிவில் பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதற்கான வாய்ப்பினை கணிசமாகக் குறைக்கின்றது. நிகழ்தகவுப் பெறுமதி 0.023 ஆக இருப்பதால் 5% பொருண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாக பொருண்மை வாய்ந்ததாக காணப்படுவதுடன், பொருளியல் பாடத் தெரிவிற்கும் குடும்ப காரணிகளுக்குமிடையே எதிர்கணியத் தொடர்பு காணப்படுகின்றன. உயர்தரகலைப்பிரிவில் மாணவன் பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதில் குடும்ப காரணிகள் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் சமூகக் காரணிகள் 1.0 ஐ விட குறைவான Exp(B) மதிப்பை கொண்டுள்ளன. இதன் Exp(B) பெறுமதி 0.084 ஆகக் காணப்படுகின்றன. சமூகக் காரணிகளின் செல்வாக்கு ஒரு அலகால் அதிகரிக்கும் போது உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

பொருளியல் பாடத்தை தெரிவுசெய்வதற்கான நிகழ்தகவானது 91.6 சதவீதத்தால் (1 - 0.084 = 0.916) குறைவடையும். பொருளியல் பாடத்தை தெரிவு செய்தால் பெறுமதி குறைவடையும் என்ற நம்பிக்கை, நண்பர் அழுத்தம் மற்றும் குறைந்தளவான முன்மாதிரிகள் போன்ற சமூக காரணிகள் உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதற்கான வாய்ப்பினை கணிசமாகக் குறைக்கின்றது. நிகழ்தகவுப் பெறுமதி 0.000 ஆக இருப்பதால் 5% பொருளுண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத்தன்மை வாய்ந்ததாக காணப்படுவதுடன், பொருளியல் பாடத் தெரிவிற்கும் சமூக காரணிகளுக்குமிடையே எதிர்கணியத் தொடர்பு காணப்படுகின்றன. இன்னும் உயர்தர கலைப்பிரிவில் மாணவன் பொருளியல் பாடத்தை தெரிவு செய்வதில் சமூகக் காரணிகள் முக்கியமான காரணியாக காணப்படுகின்றன.

பாடசாலைக் காரணிகளின் Exp(B) பெறுமதி 0.921 ஆகக் காணப்படுகின்றன. பாடசாலை காரணிகளின் செல்வாக்கு ஒரு அலகால் அதிகரிக்கும் போது உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தை தெரிவுசெய்வதற்கான நிகழ்தகவானது 7.9 வீதத்தால் (1 - 0.921 = 0.79) குறைவடையும். இருப்பினும் நிகழ்தகவுப் பெறுமதியானது 0.878 ஆக இருப்பதால் 5% பொருளுண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாக பொருளுண்மைத் தன்மை அற்றதாக காணப்படுகின்றன. ஆகவே, உயர்தரகலைப்பிரிவில் மாணவனின் பொருளியல் பாடத் தெரிவில் பொருளுள்ள வகையில் எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை. ஆய்வுக்குட்படுத்திய பிரதேசத்தின் சில பாடசாலைகள் பொருளியல் பாடத்திற்கு தேவையான வளங்களான புத்தகங்கள் மற்றும் திறமையான ஆசிரியர்கள் காணப்படுகின்றமையே பாடசாலை காரணிகள் புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத் தன்மையை கொண்டு காணப்படாமைக்கு காரணமாக இருக்கலாம்.

பாடம்சார் விழிப்புணர்வின் Exp(B) பெறுமதி 1.804 ஆகக் காணப்படுகின்றன. பாடசாலை காரணிகளின் செல்வாக்கு ஒரு அலகால் அதிகரிக்கும் போது உயர்தரகலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தை தெரிவுசெய்வதற்கான நிகழ்தகவானது 80.4 வீதத்தால் அதிகரிக்கும். இருப்பினும் நிகழ்தகவுப் பெறுமதியானது 0.435 ஆக இருப்பதால் 5% பொருண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத் தன்மை அற்றதாகக் காணப்படுகின்றன. ஆகவே, உயர்தர கலைப்பிரிவில் மாணவனின் பொருளியல் பாடத்தெரிவில் பொருளுள்ள வகையில் எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை. ஆய்வுக்குட்படுத்திய பிரதேச மாணவர்களுக்கு பொருளியல் பாடத்தை பற்றிய போதியளவான தெளிவின்மையே பாடம்சார் விழிப்புணர்வு புள்ளிவிபர ரீதியாக பொருளுண்மைத் தன்மையை கொண்டு காணப்படாமைக்கு காரணமாக இருக்கலாம்.

உயர்தர கலைப்பிரிவு பொருளியல் பாடத்தெரிவில் சமூக, தனிப்பட்ட, குடும்பக் காரணிகள் எதிர் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், சமூகக் காரணிகள் 91.6 சதவீதத்தாலும், தனிப்பட்ட காரணிகள் 72.2 சதவீதத்தாலும், குடும்பக் காரணிகள் 67.5 சதவீதத்தாலும் மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவினை குறைவடையச் செய்கின்றன.

### 4.4 சுயாதீன மாதிரி t சோதனை

தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூகக் காரணிகளை கருத்திற் கொள்ளும் போது நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விட அதிகமாகக் காணப்படுவதால். உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத் தெரிவில் ஆண், பெண் மாணவர்களுக்கிடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லை என்பது தெளிவாகின்றது. இதன் நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விட அதிகமாகக் காணப்படுவதால் புள்ளி விபர ரீதியாக பொருண்மைத் தன்மை அற்றதாகக் காணப்படுகின்றன.

உயர்தரத்தில் பொருளியல் பாடத்தெரிவில், பொருளியல் பாடமானது புள்ளிவிபரவியலுடன் தொடர்புடைய பாடம், பாடத்தின் கடினத்தன்மை, பெற்றோரின் ஊக்குவிப்பின்மை, போதியளவான வளங்கள் காணப்படாமை, பொருளியலை விட ஏனைய பாடங்கள் இலகுவானது போன்ற காரணிகள் ஆண், பெண் மாணவர்களுக்கிடையல் எவ்வித வேறுபாடுகளுமின்றி காணப்படுகின்றமையே காரணமாகும்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

**அட்டவணை 5: தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூகக் காரணிகள் மற்றும் பாடம்சார் விழிப்புணர்வில் பாலின வேறுபாட்டிற்கான சுயாதீன மாதிரி t சோதனை (Independent Sample t test)**

| மாறிகள் | பால் நிலை | | | | P_value |
|---|---|---|---|---|---|
| | ஆண் | | பெண் | | |
| | சராசரி | நியமவிலகல் | சராசரி | நியமவிலகல் | |
| தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூகக் காரணிகள் | 11.71221 | 1.42710 | 11.2701 | 1.77001 | 0.202 |
| பாடம்சார் விழிப்புணர்வு | 3.0485 | 0.46578 | 3.1310 | 0.54566 | 0.444 |

*மூலம்: ஆய்வுத் தரவுகளிலிருந்து ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது, 2025*

பாடம்சார் விழிப்புணர்வினை கருத்திற் கொள்ளும் போது நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விட அதிகமாகக் காணப்படுவதால். உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத் தெரிவில் ஆண், பெண் மாணவர்களுக்கிடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லை என்பதனை நிகழ்தகவுப் பெறுமதி காட்டுகின்றது. இதன் நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விட அதிகமாகக் காணப்படுவதால் புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத் தன்மை அற்றதாகக் காணப்படுகின்றன. இதற்கு உயர்தரத்தில் பொருளியல் பாடத்தெரிவில் பொருளியல் பாடம் குறித்த பாடத்தின் தன்மை, நோக்கம் மற்றும் உயர்கல்வி வாய்ப்பு போன்றவற்றில் சரியான தெளிவு மற்றும் புரிதலின்மையானது ஆண், பெண் மாணவர்களுடையே எவ்வித வேறுபாடுகளுமின்றி காணப்படுகின்றமையே காரணமாகும்.

**அட்டவணை 6: தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூகக் காரணிகள் மற்றும் பாடம்சார் விழிப்புணர்வில் மாணவனின் நிலை வேறுபாட்டிற்கான சுயாதீன மாதிரி t சோதனை**

| மாறிகள் | குடும்பத்தில் மாணவனின் நிலை | | | | P_value |
|---|---|---|---|---|---|
| | முதல் மாணவர் | | ஏனையோர் | | |
| | சராசரி | நியமவிலகல் | சராசரி | நியமவிலகல் | |
| தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூகக் காரணிகள் | 11.5245 | 1.56365 | 11.2935 | 1.78005 | 0.012 |
| பாடம்சார் விழிப்புணர்வு | 3.1000 | 0.57376 | 3.1145 | 0.48878 | 0.882 |

*மூலம்: ஆய்வுத் தரவுகளிலிருந்து ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது, 2025*

தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூகக் காரணிகளை கருத்திற் கொள்ளும் போது நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விட குறைவாகக் காணப்படுவதால். உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தெரிவில் குடும்பத்தில் முதல் மாணவனுக்கும், ஏனைய மாணவர்களுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதன் நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விடக் குறைவாகக் காணப்படுவதால் புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத் தன்மை வாய்ந்ததாக காணப்படுகின்றன. தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூகக் காரணிகள் பொருளியல் பாடத்தெரிவில் குடும்பத்தில் ஏனைய மாணவர்களை விட முதல் மாணவர்களின் இடையின் பெறுமதி உயர்வாகக் காணப்படுவதுடன் நியம விலகலின் பெறுமதி குறைவாகவும் காணப்படுகின்றன. இதற்கு உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தெரிவில் குடும்பத்தில் முதல் மாணவன் ஏனைய மாணவர்களை விட அதிகமாக தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, சமூக சவால்களை எதிர்கொள்கின்றமையே காரணமாகும்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

பாடம்சார் விழிப்புணர்வினை கருத்திற் கொள்ளும் போது நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விட அதிகமாக காணப்படுவதால், உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத் தெரிவில் குடும்பத்தில் முதல் மாணவனுக்கும், ஏனைய மாணவர்களுக்குமிடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லை என்பதனை நிகழ்தகவுப் பெறுமதி காட்டுகின்றது. இதன் நிகழ்தகவுப் பெறுமதியானது 0.05 ஐ விட அதிகமாக காணப்படுவதால் புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத் தன்மை அற்றதாக காணப்படுகின்றன.

இவ்வாய்வில் பங்குபற்றிய அதிகமான மாணவர்கள் குடும்பத்தில் முதலாவது மாணவர்கள் என்பதால் பாடம்தொடர்பான தெளிவான விழிப்புணர்வு அவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றமையே பாடம்சார் விழிப்புணர்வில் குடும்பத்தில் முதல் மாணவனுக்கும், ஏனைய மாணவர்களுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படாததற்கு காரணமாகும்.

## 5. முடிவுரை

இவ்வாய்வில் திருகோணமலை கோட்டக் கல்வி பாடசாலைகளில் உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவு குறைவடைந்து செல்வதற்கான காரணிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் தாக்கமானது அனுபவ அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பொருளியல் பாடத்தெரிவில் சமூகக் காரணிகள் அதிக அளவினையும், ஏனைய தனிப்பட்ட, பாடசாலை, குடும்ப, பாடம்சார் விழிப்புணர்வுக் காரணிகள் மத்திமமான அளவினைக் கொண்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளன. உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தெரிவு குறைவடைந்து செல்வதற்கு பொருளியல் பாடம் கடினம் என்ற உணர்வு, தனிப்பட்ட ஆர்வமின்மை, பொருளியல் பாடத்துடன் தொடர்புடைய ஏனைய பாடங்களின் இலகுத்தன்மை, பாடத்தெரிவில் பெற்றோரின் அழுத்தம் அதிகமாக காணப்படுவது, பொருளியல் பாடம் பற்றிய விழிப்புணர்வின்மை, குடும்பத்தில் பொருளியல் பாடத்தை கற்றவர்கள் எவருமில்லை, பொருளியல் துறையில் தேர்ச்சியடைந்த முன்மாதிரிகள் குறைவு, பாடசாலைகளில் பொருளியல் பாடம் முக்கியமானதாக வலியுறுத்தப்படாமை, பாடத்தெரிவில் நண்பர்களின் கருத்துக்கள் முக்கியத்துவப்படுத்தப்படல் போன்றவை முக்கிய காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளன. எனவே, பொருளியல் பாடத் தெரிவின் குறைவுக்கு காரணமான குடும்ப, சமூக, பாடசாலை மற்றும் பாடத்திட்ட சவால்களை நிவர்த்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த கல்விக் கொள்கை அணுகுமுறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கலைப்பிரிவு மாணவர்களில் பொருளியல் பாடத்தைதெரிவு செய்யும் மாணவர்களை அதிகரிக்க முடியும்.

## 6. கொள்கைப் பரிந்துரைகள்

திருகோணமலை பிரதேச திருகோணமலை கோட்டக் கல்விப் பாடசாலைகளை மையமாகக் கொண்ட இவ்வாய்வில் உயர்தர கலைப்பிரிவில் பொருளியல் பாடத்தை தெரிவு செய்யும் மாணவர்கள் குறைவடைந்து செல்வதற்கான காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆகவே, மாணவர்களின் பொருளியல் பாடத்திற்கான தெரிவின் அளவை அதிகரிப்பதற்காக பின்வரும் கொள்கைப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உயர்தர கலைத்துறை மாணவர்களிடையே பொருளியல் பாடம் குறித்த தவறான மனப்பான்மையை மாற்றுதல் முக்கியமானது. கல்வி அமைச்சும் மாகாண கல்வித் துறைகளும் இணைந்து பொருளியல் பாட ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டு கொள்கை (Continuous Professional Development) செயலமர்வுகளை அமுல்படுத்த வேண்டும். NIE கல்வி வலயங்களோடு இணைந்து இக் கொள்கையின் கீழ், நவீன கற்பித்தல் அணுகுமுறைகள், செயற்பாட்டுத் திறன் சார்ந்த கற்றல் (Activity-Based Learning), தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு (ICT Integration) மற்றும் மாணவர் மையக் கற்பித்தல் முறைகள் தொடர்பான பயிற்சிகள் திட்டமிட்ட வகையில் வழங்கப்பட வேண்டும்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

பெற்றோருக்கு பொருளியல் பாடத்தின் கல்வி மற்றும் தொழில்சார் வாய்ப்புகள் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால், அவர்கள் மாணவர்களை இந்தப் பாடத்தைத் தெரிவு செய்ய ஊக்குவிப்பதில்லை. ஆகையால், கல்விக் கொள்கை அளவில் பெற்றோர் விழிப்புணர்வு திட்டங்கள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கல்விக் கொள்கை ரீதியாக பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான இணைப்பை வலுப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாய்வின் கொள்கைப் பரிந்துரைகள் பொருளியல் பாடத் தெரிவின் குறைவுக்கு காரணமான தனிப்பட்ட, குடும்ப, சமூக, பாடசாலை மற்றும் பாடத்திட்டத் காரணிகளை நிவர்த்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த கல்விக் கொள்கை அணுகுமுறையை நோக்கமாகக் கொண்டுள்ளன. இக்கொள்கைகள் செயல்படுத்தப்பட்டால், உயர்தர கலைப்பிரிவு மாணவர்களிடையே பொருளியல் பாடம் குறித்த விழிப்புணர்வு, ஆர்வம் மற்றும் தெரிவு விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும் என இவ்வாய்வு நம்புகிறது.

### *7. எதிர்கால ஆய்வுகளுக்கான ஆலோசனைகள்*

இவ்வாய்வினை இலகுவாகவும், தெளிவாகவும் மேற்கொள்ள பிரதேச, விடய, கால வரையறைகளுக்கு உட்பட வேண்டி இருக்கின்றது. நேரம், பணச்செலவு என்பவற்றை கருத்திற் கொண்டு உயர்தர கலைப் பிரிவு மாணவர்கள் பொருளியல் பாடத்தைத் தெரிவு செய்தல் குறைவடைந்து செல்வதற்கான காரணிகளை கண்டறிவதற்காக திருகோணமலை பிரதேசத்தை மாத்திரம் மையப்படுத்தியதாக இவ்வாய்வு காணப்படுகின்றது. எதிர்கால ஆய்வுகளில் இலங்கையின் பல மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களை உள்ளடக்கிய தேசிய மட்ட ஆய்வுகளையும், கலைப்பிரிவில் மட்டுமன்றி வணிகப் பிரிவு மாணவர்களையும் உள்ளடக்கிய ஒப்பீட்டு ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது. இத்தகைய ஆய்வுகள் கல்விக் கொள்கை மற்றும் பாடத்திட்ட மேம்பாட்டிற்கு அறிவியல் ஆதாரங்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### உசாத்துணைகள்

Ann, L. M. (2013). Gender, Social background, and the choice of college major in a liberal arts context. Gender and society, 28(2), 289-312.

Bowles, S., and Carlin, W. (2020). What students learn in economics 101: Time for a change. *Journal of Economic Literature*, 58(1), 176-214.

Calkins, L. N., and Welki, A. (2006). Factors that influence choice of major: Why some students never consider economics. *International Journal of Social Economics*, 33(8), 547–564. https://doi.org/10.1108/03068290610678707

Duong Thi Thuy Huong, Pham Minh Hoang. (2025). Factors Influencing Students' Decision to Choose an Economics- Specialized University: A Study in Thai Nguyen City, Viet Nam. *International Journal of Research And Innovation in Social Science (Ijriss)*, Issn No. 2454-6186.

Erico oleabhiela, Maxwello ede Christmas, Kasgak Dungirtdi, (2025). Effects of treffinger learning model on students' self-efficacy on graphic-related concept in Economics. *International journal of Assessment and Evaluation in Education*,7.6.

Hawaa, H. B., and Muhammed, S. (2025). Investigation the teacher's role in selection and impact of teaching methods on the educational process, ISSN:1999-5601. https://lark.uowaist.edu.iq

Hirhyle, J. A., Nimitein, B. P., and Saleh, M. (2023). parental influence on the selection of subjects for career choice among senior secondary school students in damaturu metropolis, yobe state,

© *Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 

Nigeria. *International journal of educational researchers*, 15(1), 1-16, http://doi:10.29329/ijer.2024.652.1

Katerina, B., and Kristyna, K. (2020).Student Attitudes to selected subjects in secondary economic education. *Problems of education in the 21st century*,78. http://doi.org/10.3225/pec/20.78.09

Majidh, M. H. M., Inthisa banu, M. I. (2024). Challenges faced by arts graduates in the current job market in srilankan perspective. Journal of economics management ant finance,3,1,18-33.

Nguyen Thi, Phuong Tha Vietnam. (2023). The Importance of Economic Education: Preparing Future Generations for Global Economic Challenges. *Journal of Asian Multicultural Research for Economy and Management Study*, 4(4), 31-35. https://doi.org/10.47616/jamrems.v4i4.464

Norbert, S., Mellinda, E., and Marcel, H. (2024). Can Educational policy influence Major choices in higher education through changes in school curriculum. *Social inclusion*, 96388. http://doi.org/10.17645/si.i9638

Oyinloye, O. A., and Soetan, M. K. (2025). Influence of parents and peers on career decision- making among secondary school student: counselling implication for sustainable global balance. *Journal pembelajaran*, bimbingan, dan pengelolaan Pendidikan, 5(10), 2025. http://doi.10.17977/um065.v5.i10.2025.1

Pasupathy, S., Phillips, V., and Jamil, M. I. M (2024). Factors Influencing Advanced Level Students' Choice of Technology Stream. *International Journal of Research and Innovation*. https://dx.doi.org/10.47772/IJRISS.2024.803276S

Perera, R. H. A. T., and Pratheesh, P. (2018). Factors influence on student course selection: A case of Trincomalee Campus. *International Journal of Innovative Science and Research Technology*, 3(5), 579–581.

Sanjana, M., Irenka, S., Gill,E., and Nicky,R. (2011). Why Study Economics? Perspectives from 16-19-Year-Old Students. *Citizenship Social and Economics Education*, 10(2), 199.

Silva, H. P. T. N. (2025). A statical study on students' selection of G.C.E advanced level stream. *International Journal of advanced education research*, 10. 5-10. www.themultidisciplinaryjournal.com

Sirithunga, M. A. K. (2023). Decision support system for local A/L path selection based on knowledge management concepts. FOCSS.

Sivananthan, P., Philips Vijayaratnam, A., Jamil, M. I. M. (2024). Factors Influencing Advanced Level Students' Choice of Technology Stream. *International Journal of Research and Innovation*.

Yanhong, S, Yanhong, F, Xi zaho,Gang., L. and Lii Zang. (2025). Teachers support and secondary school students' learning engagement: A moderated mediation model. *Scientific reports*, 15. 2974.

Wijesinghe and Ranasuriya, (2021). Study on the Social Factors Influencing on the Selectionof A/L Stream in G.C.E A/L Examination: An exploratory study. *Faculty of Humanities and Sciences*, SLIIT, SICASH 2021;154-161p. https://rda.sliit.lk/handle/1234

© *Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 